**செய்தி வெளியீடு எண்: 424** **நாள் : 26.08.2015**

<u>**பத்திரிக்கை செய்தி**</u>

**சென்னை சமூகப் பாதுகாப்புத்துறையால் மாநில குழந்தை பாதுகாப்பு சங்கத்திற்கு கீழ்கண்ட பதவிகள் ஒப்பந்த அடிப்படையில் நிரப்பப்பட உள்ளதால், அதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

**நிரப்பப்படவுள்ள காலிப்பணியிடங்கள் மற்றும் தொகுப்பூதியம்**

**மாநில குழந்தை பாதுகாப்பு சங்கம்**

1. திட்ட மேலாளர் – 1 பணியிடம் (தொகுப்பூதியம் ரூ.35,000/– ஒரு மாதத்திற்கு)
2. திட்ட அலுவலர் – 1 பணியிடம் (தொகுப்பூதியம் ரூ.26,250/– ஒரு மாதத்திற்கு)
3. கணக்கர் – 1 பணியிடம் (தொகுப்பூதியம் ரூ.14,000/– ஒரு மாதத்திற்கு)
4. உதவியாளர் மற்றும் கணினி இயக்குபவர்

(Assistant cum Data Entry Operator) - 2 பணியிடம் தொகுப்பூதியம் ரூ.10,000/– ஒரு மாதத்திற்கு)

**கல்வித் தகுதி, அனுபவம் மற்றும் வயது:**

1. <u>**திட்ட மேலாளர்**</u> (1 பணியிடம்)

பட்டதாரி/முதுநிலை பட்டதாரி (10+2+3 மாதிரி)

குற்றவியல்/கல்வியியல்/ குழந்தை வளர்ச்சி /உளவியல் /சமூகப்பணி/சமூகவியல்களில் பட்டம் பெற்றிருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தொழிலாளர் நலன், கல்வி, சமூகநலம், குழந்தைநலம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றில் ஐந்து வருடம் பணிபுரிந்த அனுபவம் வேண்டும்.

**வயது வரம்பு : 40 வயதிற்கு மிகாமல்.**

**ஓய்வு பெற்றவர்கள்**

கள அளவில் புதிய திட்டங்களை வகுப்பதில் பங்குபெற்ற அரசிதழ் பதிவுப்பெற்ற அலுவலர் நிலையில் அனுபவம் மிக்க ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் விண்ணப்பிக்கலாம்.

**வயது வரம்பு : 62 வயதிற்கு மிகாமல்.**

2. <u>**திட்ட அலுவலர்**</u> (1 பணியிடம்)

பட்டதாரி/முதுநிலை பட்டதாரி (10+2+3 மாதிரி)

குற்றவியல்/கல்வியியல்/ குழந்தை வளர்ச்சி /உளவியல் /சமூகப்பணி/சமூகவியல்களில் பட்டம் பெற்றிருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தொழிலாளர் நலன், கல்வி, சமூகநலம், குழந்தைநலம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றில் மூன்று வருடம் பணிபுரிந்த அனுபவம் வேண்டும்.

**வயது வரம்பு : 40 வயதிற்கு மிகாமல்.**

**ஒய்வு பெற்றவர்கள்**

கள அளவில் புதிய திட்டங்களை வகுப்பதில் பங்குபெற்ற அரசிதழ் பதிவுப்பெற்ற அலுவலர் நிலையில் அனுபவம் மிக்க ஒய்வு பெற்ற அரசு ஊழியர்கள் விண்ணப்பிக்கலாம்.

**வயது வரம்பு : 62 வயதிற்கு மிகாமல்.**

**3. கணக்கர் (1** பணியிடம்)

பட்டதாரி/முதுநிலை பட்டதாரி (10+2+3 மாதிரி)

வணிகவியல் மற்றும் இரண்டு வருடம் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**வயது வரம்பு : 40 வயதிற்கு மிகாமல்.**

**4. உதவியாளர் மற்றும் கணினி இயக்குபவர் இயக்குபவர் (Data Entry Operator) (2 பணியிடங்கள்)**

பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்

அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் கணினி கல்வியில் பட்டயப் பயிற்சி தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் .கணினி இயக்குவதில் ஒரு வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

**வயது வரம்பு : 40 வயதிற்கு மிகாமல்.**

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் உரிய விண்ணப்பங்கள் சமூகப் பாதுகாப்புத்துறை இணைய தளமான http://www.tn.gov.in/job_opportunity -லிருந்து பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம்.

மேற்கண்ட பதவிகளுக்கான தகுதியுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் புகைப்படத்துடன் (pass port size) **14.09.2015** மாலை **5.30**ற்குள் கீழ்கண்ட முகவரியில் வந்து சேரும் வகையில் அனுப்பப்படவேண்டும்.

இயக்குநர் /செயலாளர்,

மாநில குழந்தைகள் பாதுகாப்பு சங்கம்,

சமூகப் பாதுகாப்புத்துறை,

எண். 300, புரசைவாக்கம் நெடுஞ்சாலை,

கெல்லிஸ், சென்னை–10

தொலை பேசி : 044–26421358

இயக்குனர்/செயலாளர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**